# வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம் கனடா

## முதன்முறையாக இவ்வாண்டு அறிமுகப்படுத்திய ஆசிரியர் பணி போற்றல் செயற்திட்டம்

எமது கல்லூரியில் ஆசிரியப் பணியாற்றுவதற்குப் பல்வேறு பிரதேசங்களிலிருந்து பலவித இன்னல்களுக்கு மத்தியில் ஆசிரியர்கள் வருகை தருகின்றார்கள். அவ்வாறு வருகை தரும் ஆசிரியர்களை வினைத்திறனுடன் சேவையாற்ற வைப்பதற்கும் அவர்கள் தீவக மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பதற்கும் ஆசிரியர் பணி போற்றல் செயற்றிட்டம் உந்துசக்தியாக அமையும் என்ற நம்பிக்கையில் தன்னலங் கருதாது பணி புரியும் ஆசிரியர்களைக் கீழ்க்காணும் வழிமுறைகளுக்கமையத் தெரிவு செய்து



1) மாணவர்களின் கல்விப்பெறுபேறுகள்

2) மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்சாதனைகள்

3) மாணவர்களின் ஒழுக்க விழுமிய மேம்பாட்டிற்கான அர்ப்பணிப்புக்கள்

அவர்களைக் கௌரவித்துப் பரிசில்கள் வழங்கும் சீரியசெயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற கடந்த பொதுச்சபைக்கூட்டப் பரிந்துரைக்கிணங்க 26-09-2016 இல் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் இத்திட்டத்தின் சாதக பாதகங்கள் பற்றி உறுப்பினர்கள் நீண்ட கலந்துரையாடல் நடாத்தி நன்கு பரிசீலித்து இந்த வருடப் பரிசளிப்பு விழாவில் இத்திட்டத்தை ஆரம்பித்து வைப்பதென்று தீர்மானித்தது போல் இச்சீரிய செயற்திட்டத்தைத் திட்டமிட்டவாறு வெற்றிகரமாக ஆரம்பித்து வைத்துள்ளோம் என்பதனைச்




சங்கத்தின் சார்பில் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேற்கூறிய வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்கள் மற்றும் பகுதித் தலைவர்கள் ஆகியோரின் சிபாரிசுகளை முதன்மைப்படுத்தி பாடசாலை மட்ட ஆசிரியர் செயற்பாட்டுக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் கல்லூரி அதிபர் கனடாப் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் குழுவின் செயலாளர் ஆகியோரால் இறுதித் தெரிவு நடைபெற்று 5 ஆசிரியர்களுக்குக் குரு கருணை ஒளி விருது வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொரு ஆசிரியருக்கும் 10 ஆயிரம் ரூபா ரொக்கப்பணமும் பாராட்டுக்கேடயமும் (இதற்காக எமது சங்கத்தால் வழங்கப்பட்ட நிதியுதவி 70 ஆயிரம் ரூபாக்கள்) 01-11-2016 அன்று நடைபெற்ற எமது கல்லூரித் தினப் பரிசளிப்பு விழாவில் எமது சங்கத்தின் சார்பில் கல்லூரியின் பழையமாணவரும் யாழ்ப்பாண ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் பீடாதிபதியுமான திரு ச. அமிர்தலிங்கம் அவர்கள் மூலம் வழங்கிக் கௌரவித்துள்ளோம் என்பதனைச் சங்க நிர்வாகத்தின் சார்பில் தெரிவிப்பதோடு இத்திட்டத்தினால் விளையக் கூடிய நன்மைகள் பற்றியும் இதனை நடைமுறைப்படுத்திய கனடாப் பழைய மாணவர் சங்கத்தினரின் தூர நோக்குப் பற்றியும் விழாவின் பிரதம விருந்தினரும் யாழ் அரசாங்க அதிபருமான திரு நா. வேதநாயகன் அவர்கள் பாராட்டிப் பேசியமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் வெற்றி பெறத் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் சங்கத்தின் சார்பில் நன்றிகூறுவதில் மகிழ்ச்சியும் பெருமையுமடைகின்றேன்.

நன்றே செய்வோம் அதையும் இன்றே செய்வோம்'

**சி. இளஞ்செழியன் (தலைவர்)**

வேலணை மத்திய கல்லூரிப் பழைய மாணவர் சங்கம்-கனடா